


தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06




# எம்.பி சுமந்திரன் அவர்களின் பாராளுமன்ற உரை



வடக்கு மற்றும் கிழக்கிலே முழுமையான கதவடைப்பு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அனைத்து மக்களும் அதனை அனுஷ்டிப்பதன் காரணம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்துவதாக இருந்தது. ஆனால் நாட்டிலே சர்வதேசத்திலே இதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல்களுக்கு பயந்து அது பிற்போடப்பட்டிருக்கின்றது.

அத்தோடு அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலே தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்ற பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிராக வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் இப்படியாக தங்களது எதிர்ப்பை தெரிவிக்கின்றார்கள். பல சமய வழிபாட்டு தலங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. வணக்கத்திற்குரிய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அண்மையில் கிழக்கில் பல இடங்களுக்கு நாங்கள் சென்று பார்த்த பொழுது தமிழ் முஸ்லிம் மக்களது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. குச்சவெளி பிரதேச செயலக பிரிவினுள்ளே 3600 ஏக்கர் நிலம் தொல்லியல் திணைக்களத்திற்கு தேவை என பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2015 ஆம் ஆண்டு கௌரவ கருஜெயசூர்ய அவர்கள் புத்தசாசன அமைச்சராக இருந்த வேளையிலே அது 267 ஏக்கருக்கு குறைத்து மாற்றப்பட்டிருந்தது. திரும்பவும் 3600 ஏக்கர் நிலத்தை அபகரிப்பதற்கு தற்பொழுது அளவிடல் செய்யப்பட்டிருக்கின்றது.

புல்மோட்டை பிரதேசத்திலே முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் இது நிகழும் பொழுது நாங்கள் நீதிமன்றத்தை நாடவேண்டியுள்ளது. அரச இயந்திரம் இனப்பாகுபாடு காட்டியவண்ணமாக தொடர்ச்சியாக ஒரு இனவாத நோக்கோடு விசேடமாக இந்த அரசாங்கம் தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இன்று காலையிலும் பாராளுமன்றத்திலும் நான் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி கேட்டபொழுது அதைத்தான் கேட்டேன். இனவாத முகம் அப்படியே பளிச்சென தென்பட்டது. ஏதாவது ஒரு கேள்வியை வடக்கு கிழக்கில் இருந்து கேட்பதாக இருந்தால் உடனடியாக பயங்கரவாதி என்று முன்வரிசையில் இருக்கின்ற அமைச்சரே உச்சரிச்சு சொல்கின்றார். அந்த அளவிற்கு இனவாத முகத்தை தற்பொழுது வெளிப்படையாகக் காட்டுகின்ற இந்த அரசாங்கத்தோடும் சில புல் உருவிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அதை ஒரு பக்கம் வைத்துவிட்டால் எப்பொழுதும் எந்த காலத்திலும் அப்படியான புல் உருவிகள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் அரசாங்கம் என்ற ரீதியிலே நியாயமாக நடக்கவேண்டிய ஒரு பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அப்படி நடக்காமல் இருக்கின்றபொழுது அதை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு இருக்கின்றது.

அதை வெளிப்படுத்தி வெளிப்படுத்தி பலவிதங்களிலே நாங்கள் அதை எடுத்து சொல்லியும் அது மாறாமல் இருக்கின்ற பொழுது நாங்கள் இன்று செய்வதைப் போன்று ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை நடத்த வேண்டிய ஒரு கட்டாயம் எழுந்திருக்கின்றது. ஒத்துழையாமை என்று சொல்லும் பொழுது வெறுமனே கதவடைப்பு மட்டுமல்ல. நாங்கள் வெகு விரைவிலே சட்ட மறுப்பு போராட்டமும் செய்ய வேண்டியதாக இருக்கும். அதையும் அரசாங்கத்திற்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன். இந்த மாதிரியான போக்கோடு தொடர்ச்சியாக இந்த அரசாங்கம் பயணிப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் எதிர்க்கின்றோம். மிக விசேடமாக இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பின்போடுவதனாலே எந்த பயனும் கிடையாது. அது முற்றாக மீள கைவாங்கப்பட வேண்டும். அது மீள கைவாங்கப்பட்டால் தற்பொழுது இருக்கும் பயங்கரவாத தடுப்பு சட்டம் தொடர்ந்தும் இருக்கும் என்று நீதியமைச்சர் சொல்கின்றார். அப்படியல்ல. பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும். பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கப்படும் என்ற வாக்குறுதி 2017 ஆம் ஆண்டிலேயே தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கின்ற அன்றைய பிரதம மந்திரி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கின்றார். அந்த வாக்குறுதியின் படி நடந்துகொள்ளாமையின் காரணத்தினால் தான் GSP+ வரிச் சலுகை இல்லாமல் போகின்றது. தற்பொழுது பயங்கரவாத தடுப்புசட்டத்தை நீக்குகின்றோம் என்ற போர்வையிலே அதைவிட பன்மடங்கு மோசமான ஒரு சட்டத்தை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமாக அரசாங்கம் அறிமுகப்படுத்தி. ஆனால் இன்றைக்கு ஓரளவிற்கு பின்வாங்கியிருக்கின்றது. அந்த ஓரளவு பின்வாங்கியமை போதாது. அது முற்றுமுழுதாக கைவாங்கப்படவேண்டும். அதுவரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவதற்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை இல்லாமல் பண்ணுவதற்குமான எங்களது போராட்டம் தொடர்ந்தும் நடக்கும்.

எங்களது காணிகளை அபகரிக்கின்ற விடயத்திலே அது எந்த காலத்திலும் எந்த நிலைமையிலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதது. எங்களது எதிர்ப்புக்கள் போராட்டங்கள் நடைபெறுகின்ற பொழுது அதை மீறி அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் பாரிய சட்டமறுப்பு போராட்டத்திற்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியதாக இருக்கும். பொருளாதார சிக்கலிலே இந்த நாடு சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்ற வேளையிலே இப்படியான ஒரு சிக்கலும் உங்களுக்கு தேவைதானா என நாங்கள் உங்களிடத்தில் கேட்கின்றோம். பொருளாதார சிக்கலில் இருந்து மீளெழுவதற்கு நாங்களும் எங்களாலான இயன்ற உதவிகளை செய்கின்றோம் என சொல்லியிருக்கின்ற வேளையிலும் தொடர்ச்சியாக இன. மத ரீதியாக எங்களை அடக்கி ஒடுக்கி ஒரு பேரினவாத முகத்தை காண்பிப்பீர்களாக இருந்தால் நாடு இன்னும் அதள பாதாளத்திற்குள் செல்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. குறுந்தூர் மலையிலே அங்கு இருந்த திரிசூலம் உடைத்து எரியப்பட்டது. இதைப்பற்றி பேசுகின்றபொழுது இதனோடு எனக்கு இருக்கின்ற சம்மந்தத்தை நான் வெளிப்படுத்தி தான் பேச முடியும். அது சம்மந்தமான வழக்கிலே நான் ஆஜராகின்றேன்.

# புத்தர் சிலை அகற்றப்பட்டதாக ஆயர் இல்லம் அறிவிப்பு



கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாக எமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

ஆயர் இல்லம் சார்பில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கபட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவண செய்யுமாறும் கேட்டு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கடந்த மார்ச் 27ல் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்து வைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்ச தீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

# வெளியிடப்பட்ட புத்தகம் தொடர்பாக எதிர்ப்பினை வெளிப்படுத்திய தூதுவர்




இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் புத்தக வெளியீட்டின் ஊடாக முன்வைத்த குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் பதிவொன்றை மேற்கொண்டு அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த தூதுவர். "புனை கதையாகக் கருதப்பட வேண்டிய புத்தகம்" மூலம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொய்யைப் பரப்பியதற்காக வருந்துவதாகக் தெரிவித்துள்ளார்.

மேலும். அமெரிக்கா 75 ஆண்டுகால வரலாற்றில் இலங்கையின் ஜனநாயகம். இறையாண்மை மற்றும் செழுமைக்காக மேற்கொண்ட தியாகங்களைத் தொடர்ந்தும் பராமரித்துச் செல்லும் என அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி

இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் குசல் மெந்திஸ் தனது ஒன்பதாவது சதத்தை பதிவு செய்துள்ளார்.

அதன்படி. தற்போது வரை குசல் மெந்திஸ் 160 ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடி வருகிறார்.

போட்டியின் முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி சற்றுமுன்னர் வரை ஒரு விக்கெட் இழப்பிற்கு 489 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இலங்கை அணி சார்பில் ஆட்டமிழக்காது துடுப்பெடுத்தாடி வரும் குசல் மெந்திஸ் 160 ஓட்டங்களையும். மதுஷ்க 202 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன 115 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து தனது முதல் இன்னிங்ஸிற்காக 492 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கு மகிழ்வான செய்தி



உள்நாட்டு பாடசாலை பைகள் மற்றும் காலணிகளின் விலையை குறைக்க உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் உள்நாட்டு பாடசாலை பை மற்றும் காலணி உற்பத்தியாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுநிதியமைச்சில் இடம்பெற்றது. டொலரின் விலை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அதிகரித்த பொருட்களின் விலைகள் டொலரின் பெறுமதி குறைக்கப்பட்ட போது மீண்டும் குறையவில்லை என இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையினால் பெற்றோர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் விலை குறைக்கப்படாவிட்டால் அரசாங்கம் வேறு வழிக்கு செல்ல நேரிடும் எனவும் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளார். உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை குறைந்த விலையில் சந்தையில் வெளியிடுமாறும் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி. உள்நாட்டு பாடசாலை பைகள் மற்றும் காலணிகளின் விலையை குறைக்க உற்பத்தியாளர்கள் இராஜாங்க அமைச்சரிடம் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதனுடன் தொடர்புடைய உற்பத்திகளின் விலை எத்தனை சதவீதத்தால் குறைவடையவுள்ளது என்பது குறித்து மே 23 ஆம் திகதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வசந்த கரன்னாகொடவிற்கு தடைவிதித்த அமெரிக்கா



வடமேல் மாகாண ஆளுநரான அட்மிரல் ஒஃப் தி ஃப்ளீட் வசந்த கரன்னாகொடவிற்கு தமது நாட்டிற்குள் நுழைய அமெரிக்காவால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் வசந்த கரன்னாகொடவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

வசந்த கரன்னாகொட மற்றும் அவரது மனைவி அசோகா கரன்னாகொட ஆகியோருக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோணி ஜே.பிலின்கன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த மோதல்களின் போது கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய போதுமனிதஉரிமைமீறல்குற்றச்சாட்டின்பேரில்வசந்தகரன்னாகொடவிற்கு இந்த தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மே 01இல் விசேட மே தினக் கூட்டம்




தொழிலாளர் தினத்தை முன்னிட்டு விசேட மே தின கூட்டமொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய தொழிற்சங்க பிரதிநிதிகள், வரி விதிப்பு உள்ளிட்ட தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அரச ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் இதுவரை நேரடியாக தலையிடவில்லை எனவும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் நிஹால் வீரரத்ன மேலும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்கவும் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எலிகள் மூலம் பரவும் ஒமைக்ரோன் உருமாறிய கொரோனா



கொரோனா உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது எவ்வாறு பரவியது என்பது குறித்து மருத்துவ நிபுணர்கள் ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர்.

கடந்த 2021-ம் ஆண்டு தைவான் நாட்டில் ஒரு ஆய்வு மையத்தில் தனிமையில் இருந்த இளம் பெண் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. அவர் ஆய்வகத்தை விட்டு வேறு எங்கும் செல்லவில்லை. இதனால் அவருக்கு எப்படி கொரோனா பரவியது என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பாதிப்பு ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக அவரை எலி கடித்தது தெரியவந்தது. எலி மூலம் கொரோனா பரவியதா என அப்போது பெரும் கேள்வி எழுந்தது.

இதனைத் தொடர்ந்து ஆபிரிக்கா. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் எலிகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் எலிகளுக்கு டெல்டா ஒமைக்ரோன் வகையான உருமாறிய கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக வேலூர் சிஎம்சி மருத்துவக் கல்லூரி மற்றும் பிற இந்திய நிறுவனங்களின் விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர். அவர்கள் எலிகளை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அதில் எலிகளிடமிருந்து உருமாறிய ஒமைக்ரோன் வைரஸ் தோன்றியிருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

மனிதர்களை பாதிக்கும் தொற்று நோய்கள் விலங்கிலிருந்து பரவ வாய்ப்பு உள்ளது என்பதை ஒட்டுமொத்த ஆராய்ச்சி காட்டுகிறது. விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களில் தொற்று நோய்கள் அவைகளுக்குள் வேகமாக பரவி பின்னர் மனிதனுக்கு பரவுகிறது. பின்லாந்து நாட்டில் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் கொரோனா வைரஸ் நோயால் எலிகள் எளிதில் பாதிக்கப்படுவதாக கண்டறிந்துள்ளனர். நெதர்லாந்து நாட்டில் வெள்ளெலிகளுக்குள் ஒமைக்ரோன் வைரஸ் ஒன்றுக்கொன்று பரவி பின்னர் அவற்றிலிருந்து மனிதர்களுக்கு பரவியது தெரியவந்துள்ளது. எலிகளிடமிருந்து மனிதர்களுக்கு ஒமைக்ரோன் வைரஸ் பரவினாலும் எலிகளுக்கு இந்த நோய் எப்படி ஏற்படுகிறது என்று கேள்வி எழுந்துள்ளது. எலிகள் நெருக்கமாக வசிக்கும் போது அவை எளிதில் நோய் பாதிப்புக்கு ஆளாகின்றன.

அதன் மூலம் மனிதனுக்கு காற்றில் ஒமைக்ரோன் வைரஸ் பரவுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஆராய்ச்சி நிறுவனம் கொரோனா பாதிப்பு தொடர்பான ஆய்வின் முடிவுகளை சமீபத்தில் வெளியிட்டது. இதில், நியூயோர்க்கில் சாலைகளில் சுற்றித்திரியும் எலிகள் 3 வகையான உருமாறிய கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு உள்ளது தெரியவந்தது. இங்கு 79 எலிகளை சோதனை செய்ததில், 16 எலிகளுக்கு, கொரோனா தொற்றின் உருமாறிய வகைகளான அல்பா, டெல்டா, ஒமைக்ரோன் வகை தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. "பாலூட்டி விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களுக்கு, பாதிப்பு ஏற்படும்" என அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் இது அரிதானது. எனவே, இது குறித்து குழப்பமடைய வேண்டாம் என தெரிவித்துள்ளது.

## வாகன நெரிசலைக் குறைக்க பல அடுக்கு வாகன தரிப்பிட வசதிகள்



தினமும் கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு வரும் வாகனங்களால் ஏற்படும் நகர நெரிசலை குறைக்கும் நோக்கில் கொழும்பு நகரில் பல அடுக்கு வாகன தரிப்பிடங்கள் நான்கு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம். நகர அபிவிருத்தி அதிகார சபையானது அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்த வாகன தரிப்பிடங்களை நிர்மாணிக்கவுள்ளது.

இவற்றில் இரண்டு வாகன நிறுத்துமிடங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினாலும்மற்றைய இரண்டுவாகனநிறுத்துமிடங்கள்தனியார்நிறுவனத்தினாலும் நிர்மாணிக்கப்படும். கொழும்பு டெலிகொம் நிறுவனத்திற்கு முன்பாக. நாரஹேன்பிட்டி. பழைய மீன் சந்தை பகுதிகளில் இந்த வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட உள்ளன.

அவற்றில். தனியார் துறையினரின் பங்களிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு 02. யூனியன் பிளேஸ் பொது வாகன தரிப்பிடம். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தலைமையில் நேற்று (25) பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. அக்சஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் 1.400 மில்லியன் ரூபாய் செலவில் இந்த வாகனத் தரிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு இதன் உரிமையானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்படுகிறது.

இந்த எட்டு மாடி வாகன நிறுத்துமிடம் சுமார் 300 வாகனங்களை நிறுத்தும் திறன் கொண்டது. வாகனத தரிப்பிடத்தின் செயல்பாடு கணினிகள் மூலம் செய்யப்படுகிறது. இதில் நிறுத்தப்படும் அனைத்து வாகனங்களுக்கும் முழு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி மாதாந்த வருமானத்தில் பெறப்படும் வருமானத்தில் 20% நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.